**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.18.09.2025**

**O.S. No.343/2015**

**வா.சா. 2- தங்கபாண்டியன்**

**1, 2, 3, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் எது என்றால் ஆயாள்பட்டி. எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் ஆமாம். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததால் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் செல்வராஜ் என்னை அழைத்து வந்தார் அதனால் வந்தேன். செல்வராஜ் எனக்கு யார் என்றால் மச்சினன். வழக்கு நடக்கும் சொத்தினுடைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு நடக்கும் சொத்தினுடைய நான்கு பக்க எல்கைகள் எது என்றால் வடக்கு ரோடு, தெற்கு யார் இடம் என பெயர் தெரியவில்லை, கிழக்கு தவசிக்கண்ணு தேவர், மேற்கு யார் இடம் என பெயர் தெரியவில்லை. வாதி சாட்சி சொல்ல சொன்னதால் அவருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் கட்டாரி தேவர், பால் தேவர் உடன்பிறந்தவர்கள், நான் கட்டாரி தேவர் மகளை திருமணம் முடித்துள்ளேன் சீனிப்பாண்டி, அன்னராஜ் இடத்தை சேர்த்து மொத்தமாக அனுபவித்து வந்தார் கட்டாரி தேவர் இறந்துபோனார் 9 செண்ட் தான் கொடுத்தோம். எனக்கு வழக்குப் பற்றி எதுவும் தெரியாது நான் செல்வராஜூக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் அவர் அழைத்ததன் பேரில் அவருக்கு சாதகமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 18:06:07 +0530